# NR IAS ACADEMY

**THE INSTITUTE FOR IAS, IPS, IRS (ALL UPSC & TNPSC EXAMINATIONS)**

**13-B, Sastri Road (Near Sarathambal Temple), Tennur, Trichy-17**
**Cell: 98425-54825, 73737 54851, 73057 84825**
**www.nriasacademy.com, www.nrcurrentevents.com email:vijay.nriasacademy@gmail.com**

## TNPSC - Gr-II(A) General Tamil - Answer Key 24.01.2016

1. திருக்குறள் - பொருட்பாலின் இயல்கள்
   அ) பாயிரவியல், துறவறவியல், ஒழிபியல்
   **ஆ) அரசியல், அங்கவியல், ஒழிபியல் ✓**
   இ) அரசியல், இல்லறவியல், களவியல்
   ஈ) பாயிரவியல், அங்கவியல், கற்பியல்
   **Ref: NR IAS ACADEMY's 12th Tamil Pg.35**

2. நடுவண் அரசு பெரியாரின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்ட ஆண்டு
   அ) 1968　　ஆ) 1988
   இ) 1958　　**ஈ) 1978 ✓**
   **Ref: NR IAS ACADEMY's 6th Tamil Pg.27**

3. குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர்
   **அ) பாரதம் பாடிய பெருந்தேவனார் ✓**
   ஆ) பெருங்குன்றூர்க் கிழார்
   இ) பொருந்தில் இளங்கீரனார்
   ஈ) காக்கைப் பாடினியார்

4. 'நாரதர் வருகிறார்' என்ற தொடர் என்ன ஆகுபெயர்?
   அ) காரியவாகு பெயர்　　ஆ) கருத்தாவாகு பெயர்
   இ) கருவியாகு பெயர்　　**ஈ) உவமையாகு பெயர் ✓**
   **Ref: NR IAS ACADEMY's 9th Tamil Pg.46**

5. கீழே காணப்படுபவனவற்றுள் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க.
   அ) கலம்பக இலக்கியத்தின் முதல் நூல் நந்திக்கலம்பகம்
   ஆ) காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்ட நந்திவர்ம பல்லவன் பற்றிய நூல்
   இ) நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடு அறியும் என்று தொண்டை மண்டல சதகமும், சோமேசர் முதுமொழி வெண்பாவும் நந்தி கதை உரைக்கின்றன.
   **ஈ) 'அறம் படுதல்' என்பது போர்த்தாக்குதல் முறை. அம்முறை நந்திகலம்பகத்தில் பாண்டிய மன்னனால் கையாளப்பட்டது. ✓**
   **Ans: D, Most probably**

6. பொருந்தாத விடையைக் குறிப்பிடுக.
   அ) மனுமுறை கண்ட வாசகம்
   **ஆ) திருப்புகழ் ✓**
   இ) திருவருட்பா
   ஈ) ஜீவகாருண்ய ஒழுக்கம்

7. கீழே காணப்பெறுவனவற்றுள் சரியான கூற்றுகள் எவை?
   I. நிலையாமையைச் சொல்லும் காஞ்சித் திணையின் துறைகளில் ஒன்று, 'முதுமொழிக் காஞ்சி' இப்பெயரில் மதுரைக் கூடலூர் கிழார் இயற்றிய நூல், 'அறவுரைக் கோவை' என்றும் அழைக்கப்படுகிறது.
   II. முதுமொழிக் காஞ்சியில், பதினொரு அதிகாரங்கள் உள்ளன.
   III. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துச் செய்யுட்கள் உள்ளன.
   IV. முதுமொழிக்காஞ்சியில் மொத்தம் நூற்றுப்பத்துச் செய்யுட்கள் உள்ளன. அவை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்களால் மேற்கோளாகக் கையாளப்பட்டுள்ளன.
   **அ) I மற்றும் III சரியானவை ✓**
   ஆ) I மற்றும் IV சரியானவை
   இ) II மற்றும் III சரியானவை
   ஈ) III மற்றும் IV சரியானவை

8. விடைத் தேர்க.
   மதுரைக் காஞ்சியின் சிறப்புகளைத் தேர்க.
   I. மதுரையைப் பாடுவது
   II. நிலையாமையைக் கூறுவது
   III. பத்துப்பாட்டுள் மிகுதியான அடிகளை உடையது.
   அ) II, III சரி I தவறு　　**ஆ) I, II, III சரி ✓**
   இ) I, II சரி III தவறு　　ஈ) I, III சரி II தவறு

9. பட்டியல் I-ல் உள்ள கவிதை நூல்களைப் பட்டியல் II-ல் உள்ள கவிஞர்களோடு பொருத்தி, கீழே தரப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| **கவிதை நூல்கள்** | | **கவிஞர்கள்** |
|---|---|---|
| அ. நெருஞ்சி | - | 1. சி.மணி |
| ஆ. அன்று வேறு கிழமை | - | 2. இரா.மீனாட்சி |
| இ) தோணி வருகிறது | - | 3. ஞானக்கூத்தன் |
| ஈ) வரும் போகும் | - | 4. ஈரோடு தமிழன்பன் |

| | அ | ஆ | இ | ஈ | |
|---|---|---|---|---|---|
| **அ)** | **2** | **3** | **4** | **1** | **✓** |
| ஆ) | 3 | 4 | 1 | 2 | |
| இ) | 4 | 1 | 2 | 3 | |
| ஈ) | 2 | 4 | 3 | 1 | |

**Ref: NR IAS ACADEMY's இலக்கிய வரலாறு Vol-3 Pg.19**

10. பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரட்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| அ) பெண்மை தாயாய் நின்று | - 1. அன்பே செய்யும் |
| ஆ) பெண்மை அயலார் தமக்கும் | - 2. தரணியைத் தாங்கும் |
| இ) பெண்மை மகளாய்ப் பிறந்து | - 3. தளர்வைப் போக்கும் |
| ஈ) பெண்மை தாரமாய் வந்து | -4. சேவையில் மகிழும் |

| | அ | ஆ | இ | ஈ | |
|---|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 | |
| ஆ) | 2 | 4 | 1 | 3 | |
| **இ)** | **2** | **1** | **4** | **3** | **✓** |
| ஈ) | 1 | 3 | 2 | 4 | |

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Pg.172**

11. பொருத்துக:-

| | | |
|---|---|---|
| அ) வெண்பா | - | 1. சயங்கொண்டான் |
| ஆ) விருத்தப்பா | - | 2. இரட்டையர்கள் |
| இ) பரணி | - | 3. புகழேந்தி |
| ஈ) கலம்பகம் | - | 4. கம்பர் |

NR IAS ACADEMY



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 2 | 3 | 1 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 |
| **இ)** | **3** | **4** | **1** | **2 ✓** |
| ஈ) | 2 | 3 | 1 | 4 |

12. கீழுள்ள கம்பரின் நூல் பட்டியலில் பொருந்தாத நூல் எது?
   அ) ஏரெழுபது
   **ஆ) அபிராமி அந்தாதி ✓**
   இ) சரசுவதி அந்தாதி
   ஈ) திருக்கை வழக்கம்

13. பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| | **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|---|
| அ) | ஏற்றப்பாட்டு | 1. ஒருவகை மீன் |
| ஆ) | நாரை | 2. நீர் நிலை |
| இ) | குறவை | 3. நீர் இறைக்கும் போது பாடும் பாட்டு |
| ஈ) | குளம் | 4. கொக்கு வகை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 2 | 4 | 1 |
| ஆ) | 2 | 4 | 3 | 1 |
| இ) | 1 | 2 | 4 | 3 |
| **ஈ)** | **3** | **4** | **1** | **2 ✓** |

14. கீழ்க்காணும் திருக்குறளைத் தக்க மேற்கொள் தொடரால் நிரப்புக.
   “ஊழி பெயரினும் தாம்பெயரார் --------------- ------------------”
   அ) சால்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்
   ஆ) தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்
   இ) பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு
   **ஈ) சான்றாண்மைக்கு ஆழி எனப்படு வார். ✓**
   **Ref: NR IAS ACADEMY’s 9th Tamil- Pg.146**

15. ‘நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி’ என்னும் அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்கள்
   அ) நாலாயிர திவ்வியபிரபந்தம், இருபா இருப.ஃது
   ஆ) இன்னா நாற்பது, இனியவை நாற்பது
   **இ) நாலடியார், திருக்குறள் ✓**
   ஈ) அகநானூறு, புறநானூறு

16. கீழுள்ள பட்டியலில் பொருந்தாத நாடகம்
   அ) சந்திரோதயம் ஆ) ஓர் இரவு
   **இ) தூக்கு மேடை ✓** ஈ) வேலைக்காரி
   **Ref: NR IAS ACADEMY’s இலக்கிய வரலாறு Vol-3 Pg.57**

17. திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை வீரமாமுனிவர் மொழிபெயர்த்துத் தந்த மொழி
   அ) ஆங்கில மொழி **ஆ) இலத்தீன் மொழி ✓**
   இ) வட மொழி ஈ) பிரெஞ்சு மொழி
   **Ref: NR IAS ACADEMY’s 12th Tamil- Pg.66**

18. “பெருங்கை யானை இனநிரை பெயரும் <u>சுருங்கை</u> வீதி மருங்கில் போகி” - பாடலடியின் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்:
   அ) கோட்டைவாயில் ஆ) அந்தப்புரம்
   **இ) சுரங்கப்பாதை ✓** ஈ) வேனிற்பள்ளி
   **Ref: NR IAS ACADEMY’s 7th Tamil- Pg.67**

19. கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.
   அ) தேம்பாவணி’யில் அறம், பொருள், வீடு மட்டுமே பாடப்பட்டுள்ளன. இன்பம் பாடப்பெறவில்லை
   ஆ) தேம்பாவணியை, ‘புறநிலைக் காப்பியம்’ என்று, தன்னை, புறநிலைக் காப்பியம் என்னும் தொன்னூலில் வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.
   இ) சீறாப்புராணத்தில் மூன்று காண்டங்களும், 92 படலங்களும் உள்ளன.
   ஈ) அரபுச்சொற்கள், அரபுப்பெயர்கள் எஞ்ஞான்றும் இடம் பெறாமல் சீறாப்புராணத்தினை நற்றமிழால்யாத்த திறம் போற்றுதற்குரியது.

20. பின்வருவனவற்றுள் ஓவியக்கலையோடு தொடர்பற்ற சொற்றொடர் எது?
   **அ) தேசிகப்பாவை ✓** ஆ) மர வட்டிகை
   இ) புனையா ஓவியம் ஈ) கண்ணுள் வினைஞர்
   **Ref: NR IAS ACADEMY’s 7th Tamil- Pg.149**

21. பட்டியல் I-இல் உள்ள கவிதை நூல்களை, பட்டியல் II-இல் உள்ள கவிஞர்களோடு பொருத்தி, கீழே தரப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| | **கவிதை நூல்** | | **கவிஞர்** |
|---|---|---|---|
| அ) | புலரி | - | 1. கலாப்ரியா |
| ஆ) | சுயம்வரம் | - | 2. பசுவய்யா |
| இ) | மின்னற்பொழுதே தூரம் | - | 3. கல்யாண்ஜி |
| ஈ) | யாரோ ஒருவனுக்காக | - | 4. தேவதேவன் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 4 | 2 | 3 | 1 |
| **ஈ)** | **3** | **1** | **4** | **2✓** |

**Ref: NR IAS ACADEMY’s இலக்கிய வரலாறு Pg.364**

22. பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| | **பட்டியல் ஒன்று** | | **பட்டியல் இரண்டு** |
|---|---|---|---|
| அ) | மொழி ஞாயிறு | - | 1. பாரதிதாசன் |
| ஆ) | மகா கவி | - | 2. பெருஞ்சித்திரனார் |
| இ) | புரட்சி கவி | - | 3. தேவநேயப் பாவாணர் |
| ஈ) | பாவலரேறு | - | 4. பாரதியார் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 4 | 2 |
| **ஆ)** | **3** | **4** | **1** | **2 ✓** |
| இ) | 3 | 1 | 4 | 2 |
| ஈ) | 2 | 4 | 1 | 3 |

23. பட்டியல் ஒன்றில் உள்ளதைப் பட்டியல் இரண்டும் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| | **பட்டியல் ஒன்று** | | **பட்டியல் இரண்டு** |
|---|---|---|---|
| அ) | தமிழ்நாடும், நம்மாழ்வாரும் | - | 1. கவிமணி தேசிக விநாயகனார் |
| ஆ) | தேன்மழை | - | 2. சயங்கொண்டார் |
| இ) | குழந்தைச் செல்வம் | - | 3. திரு.வி.க |
| ஈ) | இசையாயிரம் | - | 4. சுரதா |

| | அ | அ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 2 | 1 | 4 |
| **ஆ)** | **3** | **4** | **1** | **2 ✓** |
| இ) | 3 | 1 | 2 | 4 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

24. ‘கொள்’ என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று
   **அ) கொண்டான் ✓** ஆ) கொள்க
   இ) கொண்ட ஈ) கொண்டு

25. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
   அ) கப்பல் ஆ) அம்பி
   **இ) ஆழி ✓** ஈ) திமில்
   **Ref: NR IAS ACADEMY’s 9th Tamil- Pg.58**

26. பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரண்டைப் பொருத்தி,

NR IAS ACADEMY



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| | பட்டியல் ஒன்று | | பட்டியல் இரண்டு |
|---|---|---|---|
| அ) | கனகம் | - 1. | மோதிரம் |
| ஆ) | மேழி | - 2. | ஆடை |
| இ) | கலிங்கம் | - 3. | பொன் |
| ஈ) | ஆழி | - 4. | கலப்பை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 2 | 4 | 3 | 1 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 |
| இ) | 3 | 2 | 4 | 1 |
| **ஈ)** | **3** | **4** | **2** | **1 ✓** |

27. கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.
அ) சிலப்பதிகாரம், மணிமேகலை
ஆ) இன்னா நாற்பது, இனியவை நாற்பது
இ) இராமாயணம், மகாபாரதம்
**ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன், கபிலர்** ✓
**Ref: NR IAS ACADEMY's Repeated Point in class.**

28. பின்வருவனவற்றுள் தவறான இணையைச் சுட்டுக.
அ) சிறிது x பெரிது **ஆ) திண்ணிது x வலிது** ✓
இ) உயர்வு x தாழ்வு ஈ) நன்று x தீது
**Ref: NR IAS ACADEMY's Repeated Point in class.**

29. 'கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே''
கற்றவர்களின் சிறப்பைப் போற்றும் இவ்வடிகள் இடம் பெறும் நூல்
அ) அகநானூறு **ஆ) புறநானூறு** ✓
இ) நற்றிணை ஈ) கலித்தொகை
**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Pg.147**

30. கீழ்க்காணும் கருத்துகளில் தவறானதைச் சுட்டிக் காட்டவும்
அ) தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகச் சாலை இளந்திரையனும், தில்லி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சாலினி இளந்திரையனும் பணியாற்றியவர்கள்.
**ஆ) நெல்லை மாவட்டம், சாலை நயினார் பள்ளிவாசலில் பிறந்த நசிருதீனே பின்னாளில் சாலை இளந்திரையன் என்று அறியப்பட்டார்.** ✓
இ) மானுடம் பூத்தது, நெஞ்சோடு நெஞ்சம், விட்ட குறை தொட்ட குறை, செயல் மணக்கும் தோள்கள், தாய் எழில் தமிழ், உரை வீச்சு, தமிழனின் ஒரே கவிஞன் முதலியன சாலை இளந்திரையனின் நூல்களாகும்.
ஈ) கருத்துக்குப் பெரியாரையும், கவிதைக்குப் புரட்சிக் கவிஞரையும் வழிகாட்டியாகக் கொண்ட சாலை இளந்திரையன் எழுச்சிச் சான்றோர், திருப்புமுனைச் சிந்தனையாளர் ஆகிய சிறப்புகளைப் பெற்றவர்
**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Pg.231**

31. கீழே காணப்பெறுபனவற்றுள் பொருந்தாததைக் குறிப்பிடுக.
அ) ஓவ, ஓவியம், ஓவம், சித்திரம், படம், பாடம் வட்டியகைச் செய்தி எனப் பல பெயர்களால் ஓவியக்கலை வழங்கப்பெற்றது.
ஆ) ஓவியர், 'கண்ணுள் வினைஞர்' எனப் புகழப்பெற்றார்.
இ) ஓவியருக்கு, 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்' என நச்சினார்க்கினியர் தம் உரையில் இலக்கணம் வகுத்துள்ளார்.
**ஈ) ஓவியச் செந்நூல் உரை நூல் கிடக்கையும் கற்றுத் துறைபோகப் பொற்றொடி மடந்தையாகச் சுதமதி திகழ்ந்தனள் எனச் சிலம்பு பகர்கிறது.** ✓
**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Pg.150**

32. 'எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி' எனும் மதுரைக் காஞ்சியின் பாடலடி குறிப்பிடும் கலை
அ) சிற்பக்கலை ஆ) கட்டடக்கலை
இ) செப்புப்படிமக்கலை **ஈ) ஓவியக்கலை** ✓
**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Pg.178**

33. எழுத்தாளர் ஜெயகாந்தன் பெற்ற உயரிய விருது
அ) பத்மபூஷன் ஆ) பத்மவிபூஷன்
**இ) ஞானபீட விருது** ✓ ஈ) பத்மஸ்ரீ
**Ref: NR IAS ACADEMY's Repeated point in class room.**

34. பட்டியல் I-இல் உள்ள செய்யுள் தொடர்களை, பட்டியல்II-இல் உள்ள புலவர்களோடு பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

| | பட்டியல் I | பட்டியல் II |
|---|---|---|
| அ) | உடம்பார் அழியின் உயிரார் அழிவர் | 1. திருவள்ளுவர் |
| ஆ) | மீதூண் விரும்பேல் | 2. திருமூலர் |
| இ) | உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே | 3. சீத்தலைச் சாத்தனார் |
| ஈ) | நீரின்றமையாது உலகு | 4. ஔவையார் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 1 | 2 |
| ஆ) | 3 | 1 | 4 | 2 |
| **இ)** | **2** | **4** | **3** | **1 ✓** |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலசிரியர் Pg.17**

35. பொருத்துக:-

| | அறநூல்கள் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| அ) | அறநெறிச்சாரம் | - | 1. துறைமங்கலம் சிவப்பிரகாசர் |
| ஆ) | நீதி நூல் | - | 2. முத்து ராமலிங்க சேதுபதி |
| இ) | நீதி போத வெண்பா | - | 3. முனைப்பாடியார் |
| ஈ) | நன்னெறி | - | 4.மாயூரம் வேதநாயகம் பிள்ளை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 2 | 1 | 3 | 4 |
| **இ)** | **3** | **4** | **2** | **1 ✓** |
| ஈ) | 1 | 3 | 4 | 2 |

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலசிரியர் Pg.2, 3**

36. கீழ்க்காணும் 'வல்லினம் மிகும் இடம்'
குறித்த கூற்றில் பிழையான கூற்றைத் தேர்ந்தெடுக்க.
அ) அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்
ஆ) ஓரெழுத்து ஒரு மொழியில் வரும் வல்லினம் மிகும்
**இ) உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்** ✓
ஈ) சால, தல என்னும் உரிச்சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்
**Ref: NR IAS ACADEMY's Current Events - B4 Pg.54**

37. பின்வருவனவற்றுள் பண்புப்பெயர்ப் புணர்ச்சியைக் குறிக்காத விதி எது?
அ) தன்னொற்றிரட்டல்
ஆ) அடியகரம் ஐயாதல்
**இ) மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்** ✓
ஈ) இடையுகரம் இய்யாதல்
**Ref: NR IAS ACADEMY's தமிழ் இலக்கணம் Vol-4, Pg.63**

38. பெருமை + களிறு = பெருங்களிறு
புணர்ச்சி விதியைத் தேர்ந்தெடு
அ) ஈறு போதல், இடையுகரம் இய்யாதல்
ஆ) ஈறு போதல், அடியகரம் ஐயாதல்
இ) ஈறு போதல், ஆதி நீடல், முன்நின்ற மெய் திரிதல்
**ஈ) ஈறு போதல், இனமிகல்** ✓
**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Pg.12**

39. 'நல்லொழுக்கம் ஒன்றே - பெண்ணே



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

நல்ல நிலை சேர்க்கும்
புல்லொழுக்கம் தீமை - பெண்ணே
பொய்யுரைத்தல் தீமை’
-இப்பாடலில் உள்ள விளிச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) ஒன்றே **ஆ) பெண்ணே ✓**
இ) சேர்க்கும் ஈ) தீமை

40. ‘சேர்’ என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சம்
அ) சேர்ந்து ஆ) சேர்க
**இ) சேர்ந்த ✓** ஈ) சேர்ந்தது

41. பின்வருவனவற்றுள் மரக்கலத்தைக் குறிக்காத சொல் எது?
அ) பஃறி ஆ) திமில்
**இ) ஓடை ✓** ஈ) வங்கம்
**Ref: NR IAS ACADEMY’s 9th Tamil Pg.58**

42. கீழ்க்காணும் கருத்துகளில் தவறானதைச் சுட்டிக் காட்டுக.
அ) பாரதிதாசன் திருக்குறளுக்கு உரை எழுதியவர்
ஆ) பாரதிதாசன் சாகித்திய அகாடமி பரிசு பெற்றவர்
இ) பாரதிதாசன் பிரெஞ்சு மொழியில் புலமை பெற்றவர்
**ஈ) பாரதிதாசன் பெண்ணடிமைத்தனத்தைப் போற்றியவர் ✓**
**Ref: NR IAS ACADEMY’s 12th Tamil Pg.75**

43. பொருத்துக:-

| I | | | II |
|---|---|---|---|
| அ) இமயம் | - | 1. | சந்தனம் |
| ஆ) குடகு | - | 2. | பவளம் |
| இ) கொற்கை | - | 3. | மணிகள் |
| ஈ) கீழ்க்கடல் | - | 4. | முத்து |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ)** | **3** | **1** | **4** | **2 ✓** |
| ஆ) | 2 | 4 | 3 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 1 | 4 | 2 | 3 |

**Ref: NR IAS ACADEMY’s 9th Tamil Pg.59**

44. பொருந்தா இணையைக் கண்டறிக.
அ) பரவை - கடல் **ஆ) கரி - நரி ✓**
இ) பரி - குதிரை ஈ) கணை - அம்பு
**Ref: NR IAS ACADEMY’s 11th Tamil Pg.130, 131**

45. பாண்டிய நாட்டின் கொற்கைத் துறைமுகத்தைப் பற்றித் தம் பயணநூலில் குறிப்பிட்ட வெனிசு நாட்டுப் பயணி
அ) தாலமி ஆ) பிளினி
இ) யுவான் சுவாங் **ஈ) மார்க்கோ போலோ ✓**
**Ref: NR IAS ACADEMY’s 9th Tamil Pg.58**

46. ‘பலே, பாண்டியா? பிள்ளை! நீர் ஒரு புலவன், ஐயமில்லை” என்று பாரதியாரால் பாராட்டப் பெற்றவர் யார்?
அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) ச.து.சு.யோகியார்

47. பின்வரும் தகவல்களுள் தவறானதைச் சுட்டுக.
அ) ந.பிச்சமூர்த்தி மணிக்கொடி எழுத்தாளர்களுள் ஒருவர்
ஆ) ந.பிச்சமூர்த்தி ‘காட்டு வாத்து’ என்னும் கவிதையினை எழுதியுள்ளார்.
இ) ந.பிச்சமூர்த்தி ‘புதுக்கவிதை முன்னோடி’ எனப்படுகிறார்.
**ஈ) ந.பிச்சமூர்த்தி ஞானபீட விருது பெற்றவர் ✓**
**Ref: NR IAS ACADEMY’s நூல் நூலாசிரியர் Pg.3,4**

48. பொருந்தாத விடையைக் கண்டறிக.
சுந்தர ராமசாமி எழுதிய நாவல்கள்
அ) புளியமரத்தின் கதை
**ஆ) பஞ்சும் பசியும் ✓**
இ) ஜே.ஜே.சில குறிப்புகள்
ஈ) குழந்தைகள் ஆண்கள் பெண்கள்
**Ref: NR IAS ACADEMY’s தமிழ் இலக்கிய வரலாறு Vol - 1 Pg.149**

49. பட்டியல் I இல் உள்ள தொடர்களைப் பட்டியல் II இல் உள்ள தொடர் வகைகளோடு பொருத்தி, உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ) என்னே, மயிலின் அழகு! | 1. எதிர்மறைத் தொடர் |
| ஆ) கண்ணன் பாடம் படித்திலன் | 2. உணர்ச்சித் தொடர் |
| இ) மணிமொழி பரிசு பெற்றாள் | 3. கட்டளைத் தொடர் |
| ஈ) உழைத்துப்பிழை | 4. உடன்பாட்டுத் தொடர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| **இ)** | **2** | **1** | **4** | **3 ✓** |
| ஈ) | 2 | 3 | 1 | 4 |

50. பட்டியல் I இல் உள்ள சொல்லை, பட்டியல் II இல் உள்ள பொருளுடன் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் I சொல் | | | பட்டியல் II பொருள் |
|---|---|---|---|
| அ) தேநீர் | - | 1. | மூன்று நாள் |
| ஆ) முந்நாள் | - | 2. | தேன்போலும் இனிய நீர் |
| இ) தேனீர் | - | 3. | முந்தைய நாள் |
| ஈ) முன்னாள் | - | 4. | தேயிலை நீர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| **ஆ)** | **4** | **1** | **2** | **3 ✓** |
| இ) | 2 | 3 | 4 | 1 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

**Ref: NR IAS ACADEMY’s 11th Tamil Pg.130**

51. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்கி, சரியான தொடரைக் குறிப்பிடுக.
அ) படைமடம் பேகன் படான் கொடைமடம் படுதல் அல்லது
**ஆ) பேகன் கொடைமடம் படுதல் அல்லது படைமடம் படான் ✓**
இ) பேகன் படைமடம் படுதல் அல்லது கொடைமடம் படான்
ஈ) கொடைமடம் பேகன் படுதல் அல்லது படைமடம் படான்
**Ref: NR IAS ACADEMY’s - 11th Tamil Pg.12**

52. விடை தேர்க.
பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்
-இக் குறட்பாவில் பயின்று வரும் அணி
அ) சொற்பொருள் பின்வருநிலையணி
ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) உவமையணி
**ஈ) சொற் பின்வருநிலையணி ✓**
**Ref: NR IAS ACADEMY’s 10th Tamil Pg.150**

53. தவறான மரபுச் சொல்லைத் தேர்க.
அ) மாம் பிஞ்சு - மாவடு
ஆ) இளந் தேங்காய் - வழுக்கை
இ) வாழைப் பிஞ்சு - வாழைக்கச்சல்
**ஈ) முருங்கைப் பிஞ்சு - முருங்கை மொட்டு ✓**
**Ref: NR IAS ACADEMY’s 8th Tamil Pg.58**

54. கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?
I. பழந்தமிழரதுப் போர் வாழ்வு, மன்னர்களின் அறச்செயல், வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு கல்விப்பெருமை, புலவரது பெருமிதம், மக்களின் நாகரீகம், பண்பாடு பற்றியறியப் புறநானூற்றுச் செய்யுட்கள் உதவுகின்றன.
II. புற வாழ்வு பற்றிய நானூறு செய்யுட்களின் தொகுப்பு, புறநானூறு
III. புறநானூற்றில் அதிக செய்யுட்களைப் பாடியவர் ஔவையார்
IV. அறியாது முரசு கட்டிலில் தூங்கிய பெண்ணைக்



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!
NR IAS ACADEMY

கொன்றமையால் 'பெண் கொலை புரிந்த மன்னன்' என்று தூற்றப்படும் செய்தி சொல்லப்பட்டுள்ளது.

அ) I, III, IV சரியானவை

ஆ) I, II, IV சரியானவை

**இ) I, II, III சரியானவை✓**

ஈ) IV, III, II சரியானவை

55. நூல்களை நூலாசிரியர் பெயர்களோடு பொருத்தி, உரிய விடையைத் தேர்ந்தெடுக்க.

| | நூல் | | நூலாசிரியர் |
|---|---|---|---|
| அ) | பெருமாள் திருமொழி | - | 1. காரைக்கால் அம்மையார் |
| ஆ) | திருத்தொண்டத் தொகை | - | 2. ஆண்டாள் |
| இ) | அற்புதத் திருவந்தாதி | - | 3. சுந்தரர் |
| ஈ) | நாச்சியார் திருமொழி | - | 4. குலசேகர ஆழ்வார் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 2 | 3 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 2 | 1 | 4 | 3 |
| **ஈ)** | **4** | **3** | **1** | **2** ✓ |

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலாசிரியர் Pg.3**

56. கீழ்காணும் நூல்களுள் இலக்கண நூல் அல்லாதது

அ) தொல்காப்பியம் **ஆ) தேம்பாவணி** ✓

இ) தண்டியலங்காரம் ஈ) வீரசோழியம்

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலாசிரியர் Pg.1, 2**

57. கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றத்தைத் தேர்வு செய்க.

அ) ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் காடு, மலைகளில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள்

ஆ) பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர் அழுகுணிச் சித்தர் என்பன எல்லாமே காரணப் பெயர்கள்

இ) எளிய சொற்களில் அறிவுரைகளைக் கூறியவர்கள் சித்தர்கள்

**ஈ) இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தை கற்று உலகில் செல்வராக வாழச் சித்தர்கள் அவாவினர்.** ✓

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலாசிரியர் Pg.25**

58. பொருத்துக:-

| | நூல் | நூலாசிரியர் |
|---|---|---|
| அ) | மருமக்கள் வழிமான்மியம் | 1. திரு.வி.க |
| ஆ) | தமிழ்ச் சோலை | 2. சுரதா |
| இ) | இரட்சணியக் குறள் | 3. கவிமணி |
| ஈ) | தேன்மழை | 4. எச்.ஏ.கிருட்டிணனார் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 1 | 2 | 3 |
| ஆ) | 1 | 4 | 3 | 2 |
| இ) | 2 | 1 | 3 | 4 |
| **ஈ)** | **3** | **1** | **4** | **2**✓ |

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலாசிரியர் Pg.3**

59. கீழே காணப்பெறுவனவற்றுள் எக்கூற்றுகள் சரியானவை?

I. ந.வேங்கடகிருஷ்ணன் என்னும் இயற்பெயரைக் கொண்ட ந.பிச்சமூர்த்தியின் சிறந்த கவிதை நூல் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகள் என்பது

II. கதைகள் மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள் ஓரங்க நாடகங்கள் ஆகியவற்றை ந.பிச்சமூர்த்தி எழுதியுள்ளார்.

III. திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

IV. தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்பட்ட உ.வே.சாமிநாதன் தலை மாணவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.

அ) I, IV சரியானவை **ஆ) II, III சரியானவை** ✓

இ) III, IV சரியானவை ஈ) I, II சரியானவை

**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Pg.84**

60. பொருத்துக:-

| | | | |
|---|---|---|---|
| அ) | இடுகுறிப் பொதுப் பெயர் | - | 1. மரங்கொத்தி |
| ஆ) | இடுகுறிச் சிறப்புப் பெயர் | - | 2. பறவை |
| இ) | காரணப் பொதுப் பெயர் | - | 3. காடு |
| ஈ) | காரணச் சிறப்புப் பெயர் | - | 4. பனை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ)** | **3** | **4** | **2** | **1** ✓ |
| ஆ) | 2 | 1 | 3 | 4 |
| இ) | 1 | 3 | 2 | 4 |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Pg.56**

61. பொருத்துக:-

| | | |
|---|---|---|
| அ) | தாங்குறூஉம் | 1. ஒரு பொருட்பன்மொழி |
| ஆ) | வல்விரைந்து | 2. இன்னிசையளபெடை |
| இ) | ஒரீஇ | 3. உரிச்சொற்றொடர் |
| ஈ) | மல்லல் மதுரை | 4. சொல்லிசையளபெடை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 2 | 4 | 1 |
| **ஆ)** | **2** | **1** | **4** | **3** ✓ |
| இ) | 2 | 4 | 1 | 3 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Pg.55**

62. தமிழ்ப்பெயர்களைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை

I. ஒருவர், ஒரு இடம், பொருள் பற்றிக் குறிப்பதற்குக் குறியீடாக இடுவது பெயர்.

II. தமிழில் பெயர்ச் சொற்கள் ஒருபோதும் காலம் காட்டி

III. தமிழ் பெயர்ச்சொற்கள் அனைத்தும் காரணம் பற்றி அமைவன

IV. குழந்தை என்னும் தமிழ்ப்பெயர் பால் பகாப் பெயர்ச்சொல் ஆகும்.

அ) IV, III, I சரியானவை

ஆ) II, III, IV சரியானவை

**இ) I, II, IV சரியானவை✓**

ஈ) III, I, II சரியானவை

**Ref: NR IAS ACADEMY's தமிழ் இலக்கணம் Vol-5**

63. பொருத்துக:-

| | | | |
|---|---|---|---|
| அ) | தூறு | - | 1. காரணச் சிறப்புப் பெயர் |
| ஆ) | மரம் | - | 2. இடுகுறிப் பொதுப்பெயர் |
| இ) | வளையல் | - | 3. புதர் |
| ஈ) | மலை | - | 4. இடுகுறிப்பெயர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 2 | 4 |
| **ஆ)** | **3** | **4** | **1** | **2** ✓ |
| இ) | 2 | 4 | 1 | 3 |
| ஈ) | 1 | 3 | 2 | 4 |

**Ref: NR IAS ACADEMY's தமிழ் இலக்கணம் Vol-5**

64. பட்டியல் I இல் உள்ள கலைச்சொற்களைப் பட்டியல் II இல் உள்ள தமிழாக்கத்துடன் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | **பட்டியல் I** <u>கலைச்சொற்கள்</u> | **பட்டியல் II** <u>தமிழாக்கம்</u> |
|---|---|---|
| அ) | Editorial | 1. செய்தித்தாள் வடிவமைப்பு |
| ஆ) | Bulletin | 2. தலையங்கம் |
| இ) | Green Proof | 3. சிறப்புச் செய்தி இதழ் |
| ஈ) | Layout | 4. திருத்தப்படாத அச்சுப்படி |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 2 | 1 | 3 |
| **ஆ)** | **2** | **3** | **4** | **1**✓ |
| இ) | 3 | 1 | 2 | 4 |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |



NR IAS ACADEMY

This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

**Ref: NR IAS ACADEMY's - 8th Tamil, Pg.87**

65\. 'அழுது அடியடைந்த அன்பர்' எனக் குறிப்பிடப் பெறுபவர்

அ) சுந்தரமூர்த்தி

**ஆ) மாணிக்கவாசகர் ✓**

இ) திருஞானசம்பந்தர்

ஈ) திருநாவுக்கரசர்

**Ref: NR IAS ACADEMY's -10th Tamil, Pg.1**

66\. உரிய சொல்லால் நிரப்புக.

அறனறிந்து மூத்த அறிவுடையார் ---------

திறனறிந்து தேர்ந்து கொளல்.

**அ) கேண்மை ✓** ஆ) நன்மை

இ) வன்மை ஈ) தகைமை

**Ref: NR IAS ACADEMY's -10th Tamil, Pg.140**

67\. கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.

அ) 'பொல்லாக்காட்சி' என்பதன் பொருள், 'மாயத்தோற்றம்' என்பது

ஆ) வெகுளல் என்பதன் பொருள், 'சினத்தல்' என்பது

இ) வெ.'.கல் என்பதன் பொருள் 'விரும்புதல்' என்பது

**ஈ) 'குறளை' என்பதன் பொருள் 'புறம்பேசுதல்' என்பது ✓**

**Ref: NR IAS ACADEMY's -9th Tamil, Pg.122**

68\. பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| | பட்டியல் ஒன்று | | | பட்டியல் இரண்டு |
|---|---|---|---|---|
| அ) | திருச்சிற்றம்பலம் | - | 1. | வேதாரணியம் |
| ஆ) | திருமுதுகுன்றம் | - | 2. | கும்பகோணம் |
| இ) | திருமறைக்காடு | - | 3. | சிதம்பரம் |
| ஈ) | குட மூக்கு | - | 4. | விருத்தாசலம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 2 | 3 | 1 |
| **ஆ)** | **3** | **4** | **1** | **2 ✓** |
| இ) | 1 | 3 | 2 | 4 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

**Ref: NR IAS ACADEMY's -12th Tamil, Pg.166**

69\. கீழே காணப்பெறும் கூற்றுகளில் பொருத்தமற்றவற்றைத் தெரிவு செய்க.

I. திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாண சுந்தரனார் என்பதன் சுருக்கமே திரு.வி.க என்பது

II. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 'துள்ளம்' என்ற ஊரில் திரு.வி.க. பிறந்தார். இவ்வூர் 'தண்டலம்' என்றழைக்கப்படுகிறது.

III. மனித வாழ்க்கையும் இளங்கோ அடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, பொதுமை வேட்டல் ஆகிய நூல்களைத் திரு.வி.க இயற்றினார்.

IV. தமிழ் நடையில் எளிமையைப் புகுத்திய இவர் 'தமிழ்த் தென்றல்' என்ற சிறப்பிக்கப்படுகிறார்

அ) I மற்றும் IV பொருத்தமற்றவை

ஆ) II மற்றும் IV பொருத்தமற்றவை

இ) IV மற்றும் III பொருத்தமற்றவை

**ஈ) II மற்றும் III பொருத்தமற்றவை ✓**

70\. குமரகுருபரரின் நூல் பட்டியலில் பொருந்தா நூல்

அ) மதுரைக் கலம்பகம்

**ஆ) நந்திக் கலம்பகம் ✓**

இ) கந்தர் கலிவெண்பா

ஈ) நீதிநெறி விளக்கம்

**Ref: NR IAS ACADEMY's - 8th Tamil, Pg.174**

71\. தமிழ் - பிரெஞ்சு கையகர முதலி என்ற நூலை வெளியிட்டவர்?

அ) சுரதா

**ஆ) வாணிதாசன் ✓**

இ) ஆலந்தூர் கோ.மோகனரங்கன்

ஈ) பாரதிதாசன்

**Ref: NR IAS ACADEMY's - 12th Tamil, Pg.100**

72\. சரியான விடையைத் தெளிவு செய்க.

'கிறித்தவக் கம்பர்' எனப் புகழ்ப் பெறுபவர்

அ) வீரமாமுனிவர்

ஆ) ஜி.யு.போப்

இ) எல்லீஸ்

**ஈ) ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினணார் ✓**

**Ref: NR IAS ACADEMY's - 12th Tamil, Pg.117**

73\. கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.

அ) மதுரை சொக்கநாத நாயக்கர் மனைவி இராணி மங்கம்மாள்

ஆ) இராணி மங்கம்மாளின் மகன் அரங்க கிருட்டின முத்து வீரப்பன் மனைவி இராணி முத்தம்மாள்

இ) இராணி மங்கம்மாளின் பெயரன் விசயரங்கச் சொக்கநாதன்

**ஈ) பட்டினப்பாலை, பாண்டியனின் வீரச்செயல்களைப் போற்றிக் கூறும் தமிழ்ப்பனுவல் ✓**

74\. கீழே தரப்பெற்றவற்றில் எவை சரியானவை என்று எழுதுக.

I. தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரத் தமிழ்மங்கை தில்லையாடி வள்ளியம்மை

II. தில்லையாடி வள்ளியம்மை நாகப்பட்டினம் மாவட்டத்தில், திருக்கடையூருக்குத் தெற்கே மூன்று கி.மீ தொலைவில் உள்ள தில்லையாடி என்னும் ஊரில் பிறந்தவர்

III. தனது சகோதரியின் மரணத்தைவிடவும், வள்ளியம்மையின் மரணம் தனக்குப் பேரிடியாக இருந்ததென்று காந்தியடிகள் வருத்தம் தெரிவித்துள்ளார்.

IV. காந்தியடிகள் மேற்கொண்ட சத்யாக்கிரக வேள்விப்பணிக்கு முதல் களப்பலி ஆகி அவரை, 'மகாத்மா' எனும் உயர்நிலைக்கு உயர்த்திய பெருமை வள்ளியம்மைக்கு உண்டு.

**அ) I, III, IV சரியானவை ✓**

ஆ) I, II, IV சரியானவை

இ) I, III, IV சரியானவை

ஈ) II, I, III சரியானவை

**Ref: NR IAS ACADEMY's - 9th Tamil, Pg.176**

75\. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக:

| | **பட்டியல் ஒன்று** | | **பட்டியல் இரண்டு** |
|---|---|---|---|
| அ) | ஓரம் | 1. | வறுமை |
| ஆ) | வேற்றுமை | 2. | தீது |
| இ) | நன்று | 3. | மையம் |
| ஈ) | செழுமை | 4. | ஒற்றுமை |

| | **அ** | **ஆ** | **இ** | **ஈ** |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 1 | 2 |
| ஆ) | 2 | 3 | 1 | 4 |
| இ) | 3 | 2 | 1 | 4 |
| **ஈ)** | **3** | **4** | **2** | **1 ✓** |

76\. பிரித்தெழுதுக.

நாத்தொலைவில்லை

அ) நா + தொலைவில்லை

ஆ) நாத்தொலைவு + இல்லை

இ) நா + தொலைவு + இல்லை

**ஈ) நா + தொலைவு + இல்லை ✓**

**Ref: NR IAS ACADEMY's - 9th Tamil, Pg.120**

77\. நோக்கினான் - வேர்ச் சொல்லைத் தேர்வு செய்க.

அ) நோக்குதல் ஆ) நோக்கி

இ) நோக்கியவன் **ஈ) நோக்கு ✓**

78\. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) வெண்தயிர் - பண்புத்தொகை



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

**ஆ) இரைதேர்தல் - வினைத்தொகை ✓**
இ) நாழிகைவாரம் - உம்மைத் தொகை
ஈ) கயிலாய வெற்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

79. பெறு - இச்சொல்லுக்கான வினைமுற்றைத் தேர்ந்தெடு :-
**அ) பெற்றான் ✓** ஆ) பெற்றவன்
இ) பெற்று ஈ) பெற்றவர்

80. கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.
அ) கேணி, குளம், குட்டை, ஏரி, ஊருணி, பொய்கை, தடாகம்
ஆ) செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், முத்தமிழ், அமுதத்தமிழ்
இ) ஞாலம், வையம், அவனி, உலகு, தரணி
**ஈ) கலம்பகம், குறிஞ்சி, குறுநகை, தோற்றம்✓**

81. ‘தமிழகத்தின் வேர்ட்ஸ்வர்த்’ என்று பாராட்டப்பெறுபவர்
அ) சுரதா ஆ) சிற்பி
இ) பாரதிதாசன் **ஈ) வாணிதாசன் ✓**
**Ref: NR IAS ACADEMY’s - 12th Tamil, Pg.100**

82. அதியமான் நெடுமானஞ்சியின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்
அ) வெள்ளிவீதியார் **ஆ) ஔவையார் ✓**
இ) காக்கை பாடினியார் ஈ) நக்கண்ணையார்
**Ref: NR IAS ACADEMY’s - இலக்கிய வரலாறு Vol-6, Last page.**

83. கீழே தரப்பெறுவனவற்றுள் எவை சரியற்றவை?
I. குறுந்தொகைச் செய்யுட்கள் குறைந்த அளவாக மூன்று அடிகளையும், அதிக அளவாக ஏழு அடிகளையும் கொண்டு இருக்கின்றன.
II. குறுந்தொகைச் செய்யுட்களைத் தொகுத்தவர் பூரிக்கோ
III. குறுந்தொகைக்கு நக்கீர தேவநாயனார் கடவுள் வாழ்த்துச் செய்யுளைப் பாடியுள்ளார்.
IV. குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துடன் நானூற்றொரு பாடல்கள் உள்ளன.
அ) II, III சரியற்றவை ஆ) I, IV சரியற்றவை
**இ) I, III சரியற்றவை ✓** ஈ) III, IV சரியற்றவை

84. ‘புலவரேறு’ என்று சிறப்பிக்கப் பெற்றவர்
அ) நக்கண்ணையார்
ஆ) நாமக்கல் கவிஞர்
**இ) வரத நஞ்சையப்பிள்ளை ✓**
ஈ) கபிலர்
**Ref: NR IAS ACADEMY’s - 12th Tamil, Pg.3**

85. ‘தோடுடைய செவியன், விடமுண்ட கண்டன்’ என்ற தொடரால் குறிக்கப்படுபவர்
**அ) உமையொரு பாகனாம் சிவபெருமான் ✓**
ஆ) குழலூதும் கோவிந்தனாம் கண்ணன்
இ) மராமரம் ஏழினைத் துளைத்த இராமன்
ஈ) மாமரம் தடிந்த தணிகை வேலன்
**Ref: NR IAS ACADEMY’s - தமிழ் இலக்கிய வரலாறு Vol-6, Pg.4**

86. ‘நாட்டுப் புற இயலின் தந்தை’ என அழைக்கப்படுபவர்
அ) ஜேக்கப் கிரீம் ஆ) மாக்ஸ் முல்லர்
**இ) கி.வா. ஜகநாதன்✓** ஈ) ஆறு. அழகப்பன்
**Ans: C, Most probably**

87. சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து எது?
அ) அ ஆ) ஊ
இ) ஐ **ஈ) ஏ ✓**
**Ref: NR IAS ACADEMY 6th Tamil Pg.35**

88. பொருந்தா இணையினைக் காண்க.
அ) ‘பாட்டாளி மக்களது பசி தீர வேண்டும்’ - நாமக்கல் கவிஞர்
ஆ) ‘முல்லைக்கோர் காடு போலும்’ - சுரதா
இ) கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழ் - கவிமணி
**ஈ) எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் - பாரதியார்✓**
**Ref: NR IAS ACADEMY**

89. ‘தமிழ்க்கவிஞர்களின் இளவரசன்’ என்று புகழப்படுபவர்
அ) இளங்கோவடிகள் ஆ) வாணிதாசன்
இ) கண்ணதாசன் **ஈ) திருத்தக்கதேவர் ✓**
**Ref: NR IAS ACADEMY’s தமிழ் இலக்கிய வரலாறு Pg.129**

90. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு
பரிதிமாற் கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.
அ) பரிதிமாற் கலைஞர் என்ன செய்தார்?
**ஆ) பரிதிமாற் கலைஞர் எம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்? ✓**
இ) பரிதிமாற் கலைஞர் இலக்கணம் வகுத்தாரா?
ஈ) பரிதிமாற் கலைஞரின் தொண்டு யாது?

91. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
அ) வெட்சித் திணை
ஆ) வாகைத் திணை
**இ) முல்லைத் திணை ✓**
ஈ) வஞ்சித் திணை
**Ref: NR IAS ACADEMY’s 10th Tamil Pg.119**

92. சரியான எதுகையைத் தேர்க.
‘எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்’
அ) எள்ளறு - வியப்ப
ஆ) புள்ளுறு - புன்கண்
**இ) எள்ளறு - புள்ளுறு ✓**
ஈ) சிறப்பின் - புன்கண்

93. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிவது?
அ) நான்காம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை
**இ) முதல் வேற்றுமை ✓** ஈ) ஆறாம் வேற்றுமை
**Ref: NR IAS ACADEMY’s - 8th Tamil Pg.112**

94. சுரதா எழுதிய நூல்களுள் தமிழ்வளர்ச்சித்துறைப் பரிசைப் பெற்ற நூல்
அ) சுரதாவின் கவிதைகள்
ஆ) துறைமுகம்
**இ) தேன்மழை ✓**
ஈ) சுவரும் சுண்ணாம்பும்
**Ref: NR IAS ACADEMY’s 12th Tamil Pg.102**

95. ரூபாவதி, கலாவதி ஆகிய நாடகங்களை இயற்றியவர்
அ) மறைமலையடிகள் **ஆ) பரிதிமாற் கலைஞர் ✓**
இ) சுந்தரம் பிள்ளை ஈ) திரு.வி.க
**Ref: NR IAS ACADEMY’s நூல்-நூலாசிரியர் Pg.5**

96. ஏழ் பருவ மங்கையரைப் பற்றிக் கூறும் இலக்கியம் எது?
அ) தூது **ஆ) உலா ✓**
இ) பள்ளு ஈ) அந்தாதி
**Ref: NR IAS ACADEMY’s 12th Tamil Pg.18**

97. ‘சின்னச்சீறா’ என்ற நூலை எழுதியவர்
**அ) பனு அகமது மரைக்காயர் ✓**
ஆ) உமறுப்புலவர்
இ) அப்துல் ரகுமான்
ஈ) சேக் மீரான்
**Ref: NR IAS ACADEMY’s 11th Tamil Pg.45**

98. பொருத்துக:-

| | **வள்ளல்கள்** | | **சிறப்பு** |
|---|---|---|---|
| அ) | பேகன் | - | 1. நீலமணியும் நாகம் தந்த கலிங்கத்தையும் சிவனுக்குத் தந்தவன் |



NR IAS ACADEMY

This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

ஆ) காரி - 2. மயிலுக்குப் போர்வை தந்தவன்
இ) ஆய் அண்டிரன்- 3. இரவலர்க்கு நாடுகளைப் பரிசாகத் தந்தவன்
ஈ) ஓரி - 4. இரவலர்க்குத் தேர் தந்தவன்

| | அ | ஆ | இ | ஈ | |
|---|---|---|---|---|---|
| **அ)** | **2** | **4** | **1** | **3** | ✓ |
| ஆ) | 1 | 3 | 4 | 2 | |
| இ) | 3 | 4 | 1 | 2 | |
| ஈ) | 2 | 3 | 1 | 4 | |

**Ref: NR IAS ACADEMY's தமிழ் இலக்கிய வரலாறு Pg.68**

99. பட்டியல் I இல் உள்ள சொல்லைப் பட்டியல் II இல் உள்ள பொருளுடன் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடு

| பட்டியல் I சொல் | | பட்டியல் II பொருள் |
|---|---|---|
| அ) ஆகாறு | - | 1. செலவழியும் வழி |
| ஆ) போகாறு | - | 2. திருமணம் |
| இ) தகர் | - | 3. பொருள் வரும் வழி |
| ஈ) வதுவை | - | 4. ஆட்டுக்கிடாய் |

| | அ | ஆ | இ | ஈ | |
|---|---|---|---|---|---|
| **அ)** | **3** | **1** | **4** | **2** | ✓ |
| ஆ) | 4 | 3 | 2 | 1 | |
| இ) | 2 | 4 | 1 | 3 | |
| ஈ) | 3 | 4 | 2 | 1 | |

**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Pg.30**

100. பொருத்துக:-

| **பதிற்றுப்பத்து** | | **பாடியவர்** |
|---|---|---|
| அ) மூன்றாம் பத்து | - | 1. பெருங்குன்றூர் கிழார் |
| ஆ) ஆறாம்பத்து | - | 2. அரிசில் கிழார் |
| இ) எட்டாம் பத்து | - | 3. காக்கை பாடினியார் |
| ஈ) ஒன்பதாம் பத்து | - | 4. பாலைக் கௌதமனார் |

| | அ | ஆ | இ | ஈ | |
|---|---|---|---|---|---|
| **அ)** | **4** | **3** | **2** | **1** | ✓ |
| ஆ) | 2 | 3 | 1 | 4 | |
| இ) | 1 | 3 | 4 | 2 | |
| ஈ) | 2 | 3 | 4 | 1 | |

**Ref: NR IAS ACADEMY's நூல்-நூலாசிரியர் Pg.1**

NR IAS ACADEMY



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!